**<u>05.03.2026</u>**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

**<u>OS.166/2023</u>**

வா.சா. **1**

பெயர். திரு.ராஜேந்திரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என்னிடம் காண்பிக்கப்படும் குடியிருப்பு கட்டுமான ஒப்பந்த பத்திரத்தில் உள்ள ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதேபோல் அந்த ஆவணத்தோடு இணைக்கப்பட்ட வரைபடத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். அந்த குடியிருப்பு கட்டுமான ஒப்பந்த பத்திரம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் தரைதளத்தில் துணி துவைக்கும் இடத்தில் துணி துவைக்கும் இடத்தையும், ஸ்டோர் ரூமையும் விரிவுபடுத்தி கட்ட வேண்டும் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உடன்படிக்கை போட்டு எவ்வளவு நாட்கள் கழித்து அவர் வேலையை ஆரம்பித்தார் என்றால் மறுநாளே வேலையை ஆரம்பித்தார். அவர் துணி துவைக்கும் இடத்திற்கும், ஸ்டோர் ரூமுக்கும் இடையில் அடித்தளம் போட்டு, கான்கிரீட் போட்டாரா என்றால் ஆமாம். 6 அடிக்கு பள்ளம் எடுத்து அவர் அஸ்திவாரம் போட்டார் என்றால், அது தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் அஸ்திவாரம் போட்டு கான்கிரீட் ஸ்லாப் போட்டு தான் அங்கு சுவர் எழுப்பப்பட்டது என்றால் சரிதான். கான்கிரீட் ஸ்லாப்பிற்கு மேல் எவ்வளவு உயரத்திற்கு கட்டுமான பணிகள் நடைபெற்றது என்றால், சுமார் 7 அடிக்கு சுவர் எழுப்பியிருப்பார். லின்டன் அளவிற்கு அவர் சுவர் எழுப்பியுள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த இடத்தில் தான் தண்ணீர் தேங்கி இருந்தது என்றால், அங்கு கம்மியாக தான் தேங்கியிருந்தது. அந்தத் தண்ணீரை எடுப்பதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது என்றால், காலதாமதம் எதுவும் ஆகவில்லை. அந்தத்

தண்ணீர் எங்கிருந்து வரும் தண்ணீர் என்றால், மழையினால் தேங்கிய தண்ணீர் ஆகும். கட்டிடம் ஆரம்பித்து 1, 2 நாட்கள் கழித்து மழை பெய்தது. அந்த மழை பெய்த நாளில் வேலை நடக்கவில்லை என்றால் சரிதான். நடக்கவில்லை. முதல் தளத்திற்கு செல்ல எங்களது தாய் சுவரை உடைத்து தரைத்தளத்தில் இருந்து லின்டன் வரை பிரதிவாதி எத்தனை பில்லர் போட்டார் என்றால், கிழக்கு பக்கம் இரண்டு பில்லரும்(கான்கிரீட் தூண்), மேற்கு பக்கம் ஒரு பில்லரும் போட்டார். அதற்கு என்ன கம்பி பயன்படுத்தினார் என்றால், JSW பிராண்ட் கம்பி போட்டார். அதற்கு முன்பு பிரதிவாதி Isteel கம்பியை கொண்டு வந்தார். அதை நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். அதன்படி அவர் JSW பிராண்ட் கம்பி போட்டார். அந்த கம்பி அளவுகள் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. பில்லருக்காக தாய் சுவரை உடைக்கும் போது ஒரு நாள் வேலை நடந்தது. என்று கம்பி கட்டினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவர் சுவரை உடைத்த உடனேயே கான்கிரீட் சுவர் போட்டுவிட்டாரா? என்றால் மறுநாள் தான் போட்டார். கான்கிரீட் போடுவதற்கு முன்பு பிரதிவாதி எல்லா கம்பிகளுக்கும் வெல்டு வைத்தாரா என்றால், வெல்டு வைத்தார். வெல்டு வைத்து எல்லா கம்பிகளையும் கருக்கி வீணாக்கிவிட்டார். வெல்டிங் வைத்தால் கரி படியுமா என்றால் படியும். நான் சொல்வது போல வெல்டிங் செய்யும்போது கம்பி கருகாது என்றும், வெல்டிங் வைத்தால் தான் கம்பி வேலை செய்ய முடியும் என்றால், கொளுத்து வேலை (சித்தாள்) செய்பவர்களுக்கு அது பற்றி என்ன தெரியும் என்று நான் ஆட்சேபனை செய்தேன். அதன் பிறகு பிரதிவாதி வெல்டரை கூட்டி வந்து வெல்டு செய்தார். எல்லா கம்பியையும் வெல்டு செய்தாரா? என்றால், எந்த கம்பி தேவையோ அதை மட்டும் வெல்டு செய்தார். இந்த வெல்டு வேலை எவ்வளவு நாட்கள் ஓடியது என்று எனக்கு ஞாபகம் இல்லை. சுமார் ஒரு வாரம் வெல்டு வேலை நடந்திருக்குமா? என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கான்கிரீட் போட்டால் க்யூரிங் டைம் என்று உள்ளது என்றால் சரிதான். அந்த க்யூரிங் டைம்-க்கு நான் பிரதிவாதியை ஆட்சேபனை செய்து நான் வேலையை நிறுத்திவிட்டேனா என்றால், இல்லை. அவர் ஏதோ ஒரு நாள் க்யூரிங் க்கு தண்ணீரால் நனைத்தார். பிரதிவாதி வேலையை நிறுத்திய காலத்தில் அங்கு என்ன என்ன கட்டுமான பொருட்கள் இருந்தது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. அவரை அன்றே எடுத்துப் போக சொல்லிவிட்டேன். பிரதிவாதியிடம் நான் அனைத்து பொருட்களையும் எடுத்து போக சொல்லிவிட்டேன். எவ்வளவு பொருட்கள் அங்கு இருந்தது என்று எனக்கு தெரியாது. கம்பி எவ்வளவு இருந்தது, செங்கல் எவ்வளவு இருந்தது, சிமெண்ட் பைகள் எவ்வளவு இருந்தது, ஜல்லி எவ்வளவு இருந்தது, வேறு

கட்டுமான பொருட்கள் எவ்வளவு இருந்தது என்று எனக்குத் தெரியாது. நான் அவர் பொருளை எப்படி காவல் காக்க முடியும் என்று கூறிவிட்டேன். அந்த கட்டுமான பொருட்களை எனக்காக தான் வாங்கினார். அவர் ஒருநாள் அந்த ஜல்லி, மணல் ஆகியவற்றை அங்கிருந்து எடுத்துச் சென்றார். நான் கேட்டதற்கு பிரதிவாதி வேறு ஒரு வீட்டிற்கு வேலை செய்ய எடுத்து போவதாக சொன்னார். அந்த விவரத்தை நான் எனது பிராதில் சொல்லியுள்ளேனா? என்றால் இல்லை. பிரதிவாதி தற்காலிகமாக ஒரு செட் அமைத்து அதில் தான் கட்டுமான பொருட்கள் அனைத்தையும் போட்டு வைத்திருந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி உடன்படிக்கை போட்டு சுமார் 4 நாட்கள் கழித்து செட் போட்டார். நான் வேலையை நிறுத்து என்று சொல்லும் வரை அங்கு செட் இருந்தது என்றால் சரிதான். அதில் தான் கட்டுமான பொருட்கள் இருந்தது என்றால் சரிதான். நான் சரியாக 90 வது நான் வேலையை நிறுத்த சொல்லிவிட்டேன் என்றால், சுமார் 100 வது நாளில் வேலையை நிறுத்த சொல்லி விட்டேன். பிரதிவாதி அன்று செய்துவிட்ட வேலை அப்படியே தான் தற்போது வரையில் உள்ளது என்றால், இல்லை வேலை நடந்தது. அதன் பிறகு நான் வேறு கொத்தனாரை வேலைக்கு வைத்து வேலை நடந்தது. நான் வேலைக்கு வைத்த கொத்தனார் சுமார் ஒரு மாதம் வேலை செய்தார். தற்போது இன்னும் வீடு முடியவில்லை. அவரது வேலையை முடிக்க சொல்லிவிட்டேன் என்றும், அதன் பிறகு நான் வேலைக்கு வைத்த கொத்தனார் வேலை செய்தார் என்ற விவரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேனா? என்றால் இல்லை. நான் கொத்தனாரை வைத்து மேற்கொண்டு வேலை செய்யப் போகிறேன் என்று பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்தேனா? என்றால் இல்லை. நான் எனது பிராதில் பிரதிவாதி ரூபாய் இரண்டு லட்சத்திற்கு தான் வேலை செய்திருக்கிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தோராயமாக நான் சொன்னேன். ஆணையர் தனது அறிக்கையில் ரூபாய் 6,49,065/- க்கு வேலை நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால், அவ்வளவு வேலை நடக்கவில்லை. ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா? என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆணையர் பொறியாளர் சொன்னதன் அடிப்படையில்தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பொறியாளர் தனித்தனியாக பிரித்து இந்த இந்த வேலைக்கு இவ்வளவு ஆகும் என்று குறிப்பிட்டுள்ளாரா? என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஆணையருடன் பார்வையிட்ட பொறியாளர் சரியான படி எதையும் கணக்கிடவில்லை என்றும், பொது பணித்துறை விலை நிர்ணயம் படி எந்த கட்டுமானத்தையும் கணக்கிடவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அவருக்குத்தான் தெரியும்.

பிரதிவாதி நான் கொடுத்த ரூபாய் 12 லட்சத்திற்கு உண்டான வேலையை செய்துவிட்டார் என்று சொன்னால், சரியல்ல. மேற்கொண்டு பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டபோதுதான், உனக்கு இந்த ரூபாய் 12 லட்சம் கொடுத்ததை அதிகம், வேலையை முடித்துக் கொடு என்று சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்கொண்டு உடன்படிக்கைப்படி அடுத்த தவணை பணம் கொடுக்காததால்தான், பிரதிவாதி வேலையை நிறுத்தினார் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் உடன்படிக்கையில் முதல் தவணை Before roof கூரை போடுவதற்கு முன்பு, ரூ - 12,00,000/- கொடுக்க வேண்டும் என்று உள்ளது என்றால் ஆமாம், ரூ.12,00,000/- கொடுத்தேன் ஆனால் அதற்கான வேலை நடக்கவில்லை. லின்டன் வரையே வரவில்லை. லின்டனுக்கு மேல் பிரதிவாதியை நான் வேலை செய்யவே விடவில்லை என்றும், அவரை 90 நாட்களுக்கு மேல் வீட்டுக்குள்ளேயே விடமாட்டேன் என்று சொல்லிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய செயல்பாட்டால் தான் அவர் உடன்படிக்கைப்படி மேற்கொண்டு கட்டுமானம் கட்ட முடியாமல் போய்விட்டது என்று சொன்னால், முழுக்க முழுக்க பொய்யாகும். நான் ரூ.12,00,000/- க்கு எல்லாவற்றையும் முடித்து விடலாம் என்று கணக்கு போட்டு பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. கட்டிடம் பாதியில் நின்று போனதற்கு முழு காரணமே நான் தான், எனது செயல்பாடுகள் தான் என்று சொன்னால் சரியல்ல. நஷ்ட ஈடு கேட்பதற்கும், கூடுதல் இழப்பீடு கேட்பதற்கோ எனக்கு முகாந்திரம் இல்லை என்றும், எனது தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. நான் நிறுத்த சொன்ன தேதியில் அங்கு இருந்த கட்டுமான பொருட்களை வைத்து பிரதிவாதி லின்டன் அளவிற்கு மேல் வந்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பலமுறை என்னிடம் வந்து கட்டுமான பொருட்கள் எல்லாம் இருக்கிறது வேலையை நிறுத்தாதீர்கள் என்று சொல்லியும் நான் தடுத்ததால் தான் வேலை செய்ய முடியாமல் போய்விட்டது என்று சொன்னால் சரியல்ல. நான்தான் பிரதிவாதியிடம் எல்லா கட்டுமான பொருட்களையும் எடுத்துச் சென்று விடு என்று சொன்னேன்.

<u>மறு விசாரணை:</u>

<u>இல்லை.</u>